# CURRENT AFFAIRS

**மே 2018**

# தமிழ்நாடு நிகழ்வுகள்

## ➢ முதல் சர்வதேச இரயில் பெட்டி கண்காட்சி

- இரயில் பெட்டிகள் மீது கவனம் செலுத்துவதற்காக, முதல் சர்வதேச இரயில் பெட்டி கண்காட்சி சென்னையில் நடைபெற்றது.

- மூன்று நாள் நடைபெற்ற இக்கண்காட்சியானது, ரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையால் (Integral Coach Factory – ICF) இந்திய தொழிலகக் கூட்டமைப்பு மற்றும் RITES நிறுவனம் ஆகியவற்றின் கூட்டிணைவோடு நடத்தப்பட்டது.

## ➢ தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு குழு – உருவாக்கம்

- தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் கீழ் இயங்குவதற்காக **தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டுக் குழு** புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

## ➢ தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு குழு தலைவராக – எஸ்.எஸ். ராஜகோபால் நியமனம்

- தமிழ்நாடு நீர்வள மேம்பாட்டு குழு தலைவராக **ஓய்வுபெற்ற நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர் எஸ்.எஸ். ராஜகோபால்** நியமிக்கப்பட்டுள்ளார். **துணைத் தலைவர், 2 உறுப்பினர்கள் என மொத்தம் 4 பேர்** நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ➢ இந்தியாவின் அடுத்த தலைமுறை பாதுகாப்பு வானூர்தி

- விமான மேம்பாட்டு நிறுவனத்தால் (Aeronautical Development Agency) உருவாக்கப்பட்டு, வடிவமைக்கப்படும் இலகுரக போர் விமானத்தை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- அடுத்த தலைமுறை பாதுகாப்பு விமானமான மேம்படுத்தப்பட்ட நடுத்தர வகை தாக்குதல் போர் விமானத்தினை (Advanced Mmedium Combat Aircraft – AMCA) கட்டமைப்பதற்காக **கோயம்புத்தூரில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

## ➢ சென்னையில் அமையும் - ஆசியாவின் பெரிய சுரங்க மெட்ரோ ரயில் சதுக்கம்

- **சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம்** எதிரே பூந்தமல்லி நெடுஞ்சாலைக்கு கீழே 70,060 சதுர அடியில், **சுரங்க மெட்ரோ ரயில் நிலையத்தை** அமைக்கும் பணி நடந்து வருகிறது. ரூ.400 கோடி செலவில் பல்வேறு வசதிகளுடன் இந்த ரயில் நிலையம் **ஆசியாவின் பெரிய சுரங்க மெட்ரோ ரயில் சதுக்கமாக** உருவாக்கப்பட்டு வருகிறது.

- சென்னை மாநகரில், **2018 மே 25 அன்று, நேரு பூங்கா – சென்டிரல்** (2.7 கி.மீ. நீளம்) மற்றும் **சின்னமலை – தேனாம்பேட்டை ஏ.ஜி-டி.எம்.எஸ்.** இடையே (4.5 கி.மீ. நீளம்) கொண்ட **"சுரங்கப் பாதைகளில் மெட்ரோ ரெயில்"** போக்குவரத்தை **முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி** ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

➢ **தூத்துக்குடி ஸ்டெர்லைட்** ஆலையின் **முதல் அலகை மூட தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மே 24** அன்று உத்தரவிட்டு உள்ளது. ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டம் நடைபெற்று வந்த நிலையில், **மே 22 அன்று போராட்டக்காரர்கள் மீது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.**

➢ **தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு : "நீதிபதி அருணா ஜெகதீசன்" விசாரணை ஆணையம்**

- **தூத்துக்குடியில் மே 22** அன்று, நடைபெற்ற **ஸ்டெர்லைட் ஆலைக்கெதிரான,** எதிரான போராட்டத்தில் காவல்துறை நடத்திய **துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.** துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரிக்க, **"ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன்"** தலைவராகக் கொண்ட **ஒருநபர் விசாரணை ஆணையம்** அமைத்து முதல்வர் எடப்பாடி க. பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

➢ உதகமண்டலத்தில் **122வது மலர்க்கண்காட்சியின் நிறைவு விழா மே 22** அன்று நடைபெற்றது. நாட்டின் மொத்த மலர் உற்பத்தியில் **தமிழ்நாட்டில் 19% மலர்கள் உற்பத்தி** செய்யப்படுகிறது என தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் தெரிவித்துள்ளார்.

## ➢ கோயம்புத்தூரில் "போலீஸ் அருங்காட்சியகம்" – திறந்து வைப்பு

- கோயம்புத்தூரில் "போலீஸ் அருங்காட்சியகத்தை" முதலமைச்சர் எடப்பாடி க. பழனிசாமி மே 17 அன்று திறந்து வைத்தா. இந்த போலீஸ் அருங்காட்சியம் **தமிழ்நாடு போலீஸ் துறையின் சிறப்பு அம்சங்களை எடுத்துக்கூறும் வகையில் தமிழகத்திலேயே முதன்முறையாக** அமைக்கப்பட்டு உள்ளது.
- போலீஸ் அருங்காட்சியகம் **கேரள மாநிலம் கொல்லம், மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தா, அரியானா** ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

## ➢ 2018 உதகை மலர்க் காட்சி – தொடக்கம்

- தமிழ்நாடு முதல்வர் **எடப்பாடி பழனிசாமி 2018 உதகை மலர்க்**

**காட்சியை** தொடங்கி வைத்தார். **122வது உதகை மலர்க் காட்சி மே 18 அன்று முதல் 22 வரை 5 நாட்கள்** நடைபெறுகிறது.

- **குந்தா நீரேற்றுப் புனல் மின் திட்டம்:** ரூ.1,850 கோடி மதிப்பீட்டினாலான குந்தா நீரேற்றுப் புனல் மின் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.
- தமிழ்நாட்டின் முதன்முறையாக மதுரை உலகத்தமிழ்ச் சங்க வளாகத்தில் **தமிழர்களின் கலை, பண்பாட்டு வரலாற்றை** விளக்கும் வகையில் **ரூ.50 கோடியில் அருங்காட்சியம்** அமைக்கப்ட உள்ளது.

> ➢ **மாநிலங்களுக்கிடையேயான சரக்கு போக்குவரத்தை நெறிப்படுத்தும் இ-வே பில் முறை (e-Way Bill system) தமிழ்நாட்டில் 2 ஜூன் 2018 முதல்** நடைமுறைக்கு வரவிருக்கிறது.

> ➢ **13வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு பெங்களூரில் ஜூன் 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கிறது.** மலேசியாவில் 1974-ம் ஆண்டு வீரப்பனாரால் தொடங்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டிற்கு டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் சட்டக் கல்லூரியின் முதல்வர் சி.இராமமூர்த்தி தலைவராக செயல்படவுள்ளார்.

➢ **தூத்துக்குடியில் கடந்த 22 ஆண்டுகளாக இயங்கி வந்த வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்கான அரசாணையை** தமிழக அரசு 28-05-2018 அன்று வெளியிட்டுள்ளது.

➢ **தமிழ் எழுத்துக்களுடன் கூடிய செம்பு காசு கண்டுபிடிப்பு:** கி.பி. 15ம் நூற்றாண்டில், அப்போதைய ஒன்றிணைந்த சேலம் மாவட்டம், ஓசூரை ஆண்ட மன்னன் ராமண்ண நாயக்கர் வெளியிட்ட நரசிம்மரின் உருவம், தமிழ் எழுத்துக்களுடன் கூடிய அரிய செம்புக்காசு கிடைத்துள்ளது.

- **சென்னையில் ரஷிய கல்விக் கண்காட்சி** : சென்னையில் உள்ள ரஷிய கலாச்சார மையத்தில் மே 19, 20 ஆகிய தேதிகளில் ரஷிய கல்விக் கண்காட்சி நடைபெற்றது.

- **ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் யுனிசெப் இணைந்து நடத்திய ஆரம்ப கால குழந்தை வளர்ச்சி குறித்த கருத்தரங்கு** 17.5.2018 மற்றும் 18.5.2018 ஆகிய தேதிகளில் **சென்னையில்** நடைபெற்றது. 1978-ல் தொடங்கப்பட்டது.

- **காச நோய் கட்டுப்பாடு – திண்டுக்கல் முதலிடம்** : காச நோயைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சிறப்பான சிகிச்சை வழங்குதல் ஆகியவற்றில் தமிழகத்திலேயே திண்டுக்கல் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

## ➢ ஆந்திர மாநில அதிகாரப்பூர்வ சின்னங்கள் - அறிவிப்பு

- **ஆந்திர அரசு** மாநிலத்தின் **அதிகாரப்பூர்வ சின்னங்களை** அறிவித்துள்ளது. அவற்றி விவரம் :
- **மாநில மரம்** - வேப்பமரம் (Neem)
- **மாநில விலங்கு** – பிளாக் பக் (Black Buck)
- **மாநில மலர்** - மல்லிகை (Jasmine)
- **மாநில பறவை** – கிளி (Rose – ringed parakeet)

- **'சந்தோக்பா மனிதாபிமான விருது 2018'** (Santokbaa Humanitarian Award) நோபல் பரிசு பெற்ற குழந்தைகளை நலன் பாதுகாப்பாளர் திரு.**கைலாஸ் சத்திய மூர்த்தி** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- **'PRAAPTI App' மற்றும் www.prapti.in இணையதள சேவை** : மின் உற்பத்தியாளர்கள் மற்றும் மின் பகிர்மான கழகங்களிடையே வெளிப்படையான

பணப்பரிமாற்றத்தை உறுதி செய்யும் வகையில் 'PRAAPTI – Payment Ratification And Analysis in Power procurement for bringing Transparency in Invoicing of Generators' என்ற செயலி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

- டெய்பி உலக வர்த்தக மையமானது (Traipei World Trade Centre – TWTC) புது தில்லியில் தன்னுடைய அலுவலகத்தை தொடங்கியுள்ளது.
    - வர்த்தகத்தில் உள்ள நவீன தொழில்நுட்பங்களையும், பொலிவுறு நகரங்களின் தீர்வைகளையும் காட்சிப்படுத்த உள்ள தைவானின் முதல் கண்காட்சி முன் கூட்டியே இந்த வர்த்தக மையம் டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளது.

- **சங்கீதா பஹல், "எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய அதிக வயதான இந்திய பெண்"** என்ற சாதனையை படைத்துள்ளார். **53 வயதில் இந்த சாதனையை** செய்துள்ளார்.

## ➢ BSNL இந்திய வானிலை ஆய்வு மையம் - ஒப்பந்தம்

- **மக்களுக்கு வானிலை எச்சரிக்கை அனுப்ப தொலைதொடர்பு நிறுவனமான BSNL** உடன் **இந்திய வானிலை ஆய்வு மையம் ஒப்பந்தம்** செய்துள்ளது.

## ➢ முத்ரா திட்டம் - 12 கோடி பேருக்கு, ரூ.6 லட்சம் கோடி கடன் அளிப்பு

- முத்ரா திட்டத்தின் கீழ் **12 கோடி பேருக்கு ரூ.6 லட்சம் கோடி கடன்** அளிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

❖ **முத்ரா திட்டம் (2015)**

- பெரு நிறுவனங்கள் அல்லாத சிறு, குறு நிறுவனங்களுக்கு தொழில் கடன் அளிப்பதற்கு, **'பிரதம மந்திரி முத்ரா யோஜனா'** (PMMY) எனும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி, 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ம் தேதி தொடங்கி

வைத்தார்.

- **மே 27 அன்று நடந்த மனதின் குரல் 44வது நிகழ்வின்** குறிப்புகள்:
    - **NSV தாரிணி கப்பல்:** இந்திய கடற்படையை சேர்ந்த பெண்கள் குழு, INSV தாரிணி கப்பலில், 250 நாட்களுக்கு மேலாக பயணம் செய்து உலகம் முழுவதையும் சுற்றி வந்திருக்கிறார்கள்.
    - ஹரியாணா மாநிலம் பிசாரைச் சேர்ந்த **சிவாங்கி பதக் என்ற 16 வயது மாணவி எவரெஸ்ட்டில்** ஏறி புதிய சாதனை புரிந்துள்ளார்.
    - **உலகச் சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5** : உலகச் சுற்றுச்சூழல் தினமான **ஜூன் 5-ந்** தேதியை கொண்டாட வேண்டும். **பிளாஸ்டிக்கால் ஏற்படும் சீர்கேட்டை ஒழிப்பதை** இந்த ஆண்டு சுற்றுச்சூழல் தினத்தின் பிரதான நோக்கமாகும்.
    - **ஜூன் 21-ம் தேதி சர்வதேச யோகா தினம்** கொண்டாடப்படுகிறது. உடல்நலம், மகிழ்ச்சிக்கு யோகா மிகவும் அவசியம்.

## ➢ பள்ளிக்கல்விக்கு ஆதரவு வழங்கும் "சமார்க சிக்சா" (Samagra Shiksha) திட்டம் - தொடக்கம்

- **புதுடெல்லியில்** முதன்முறையாக **பள்ளியின் முதல்நிலை முதல் உயர்நிலை வரை ஆதரவு வழங்குவதற்கான** ஒருங்கிணைந்த திட்டமாக "சமார்க சிக்சா" **(Samagra Shiksha)** என்ற திட்டத்தை, மனித வள மேம்பாட்டு அமைச்சர் **பிரகாஷ் ஜவடேகர்** தொடங்கி வைத்தார்.

- மணிப்பூர் மாநிலத்தில் **"இந்தியாவின் முதல் விளையாட்டு பல்கலைக்கழகம்"** அமைப்பது தொடர்பான அவசர சட்டத்திற்கு **மத்திய அமைச்சரவை ஒப்புதல்** வழங்கியுள்ளது.

## ➢ இராஜஸ்தான் அரசின் 'நிடான்' (Nidaan) என்ற மென்பொருள் - அறிமுகம்

- **இராஜஸ்தான் அரசு 'நிடான்' (Nidaan) என்ற மென்பொருளை,** அறிமுகம்

செய்துள்ளது. பருவகால மற்றும் பரவக்கூடிய **நோய்களை கண்டறிதல் மற்றும் கண்காணிப்பிற்காக** இந்த மென்பொருள் பயன்படும்.

- **இந்தியாவின் "முதல் எரிசக்தி ஒழுங்குமுறை மையம் (CER)" – IIT கான்பூர் - இல் அமைப்பு**
    - கான்பூர் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT KANPUR) ஆற்றல் மற்றும் மின் துறையின் கொள்கைகளை வலுப்படுத்த நாட்டின் "முதல் எரிசக்தி ஒழுங்குமுறை மையத்தை" (Centre for Energy Regulation, CET) அமைந்துள்ளது.

- **பேஸ்புக் நிறுவனம் மற்றும் தேசிய பெண்கள் கமிஷன் ஆகியவை 'சைபர் பீஸ் பவுண்டேஷன்' (Cyber Peace Foundation) எனும் அமைப்புடன் இணைந்து, இந்தியாவில், 60000 பெண்களுக்கு 'கணிணி கல்வியறிவு'** (digital literacy) வழங்குதற்கு திட்டமிட்டுள்ளன.

- **உலகின் முதல் முழுவதும் சூரிய சக்தியில் இயங்கும் விமான நிலையம் எனும் பெருமையை 'கொச்சி சர்வதேச விமான நிலையம்' பெற்றுள்ளது.** இதற்கான அங்கீகாரத்தை 'ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பு (United Nations Environmental Programme (UNEP)) 28-05-2018 அன்று வழங்கியுள்ளது. இந்த விமான நிலையத்தில் 45 ஏக்கர் நிலப்பரப்பில், 46,150 சோலார் தகடுகளை பொருத்தப்பட்டு 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் 3 லட்சம் டன் கார்பண் டை ஆக்ஸைடு வெளியிடுதல் தடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

- **இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக, ஹிமாச்சல் பிரதேச மாநில அரசு 'பிராக்ரிதிக் கேடி குஷால் கிஸான் யோஜனா'** (Prakritik Kheti Khushhaal Kissan Yojana) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- **நாட்டிலேயே முதல் முறையாக விவசாயிகளுக்கு ரூ.5 இலட்சம் ஆயுள் காப்பீடு**

**வழங்கும் திட்டத்தை தெலுங்கான அரசு அறிவித்துள்ளது.** இத்திட்டத்தை இந்திய அரசின் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி யுடன் இணைந்து தெலுங்கான மாநில அரசு வழங்கவுள்ளது.

- **'சூரிய சக்தியில் இயங்கும் கழிவறைகள்' (solar toilet) பெற்றுள்ள முதல் வடகிழக்கு மாநிலம் எனும் பெருமையை மணிப்பூர் மாநிலம்** பெற்றுள்ளது.

- **'பட்ராது சூப்பர் அனல் மின் நிலையம்' (Patratu Super Thermal Power Project) திட்டத்திற்கு 25 மே 2018 அன்று பிரதமர் மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.** முதல் கட்டம் நிறைவுறும் நிலையில் 2400 மெகா வாட் மின்சாரமும், இரண்டாம் கட்டத்தின் மூலம் 1600 மெகா வாட் மின்சாரமும் உற்பத்தி செய்யவல்ல இந்த திட்டம் ஜார்கண்ட் மாநிலத்தில் அமையவுள்ளது. இத்திட்டம் மூலம் **ஜார்க்கண்ட் மாநிலத்தின் 85% மின்சார தேவை எதிர்கொள்ளப்படும்** என தெரிவிக்கப்பட்டுள்ளது.

  - **4வது 'திறன் நகரங்கள் கண்காட்சி 2018' (Smart Cities India 2018 Expo)** 23-25 மே 2018 தினங்களில் புது தில்லியில் நடைபெற்றது. இந்த கண்காட்சியை 'இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம்' (India Trade Promotion Organisation (ITPO)), 'நாஸ்காம் நிறுவனம்' (NASSCOM Center of Excellence IoT) மற்றும் 'எக்சிபிஷன் இந்தியா குழு' (Exhibitions India Group) இணைந்து நடத்தியது குறிப்பிடத்தக்கது..

## ➢ இளம் வயதில் எவரெஸ்ட் சிகரம் ஏறிய இந்திய பெண் - சிவாங்கி பதக்

- நேபாள நாட்டில் **8,848 மீட்டார்** உயரம் கொண்ட, **உலகின் மிக உயர்ந்த சிகரமான "எவரெஸ்ட்" சிகரத்தில்** ஏறி, அரியானா மாநிலத்தின், **16 வயது சிறுமி சிவாங்கி பதக்,** சாதனை படைத்துள்ளார். இதன்மூலம் **"இளம் வயதில் எவரெஸ்டை தொட்ட இந்திய பெண்"** என்ற பெருமை

இவர் பெற்றுள்ளார்.

## ➢ காவிரி மேலாண்மை ஆணையம் - உச்ச நீதிமன்றம் உத்தரவு

- காவிரி வழக்கில் **மத்திய அரசு மாற்றியமைத்த வரைவு செயல் திட்ட அறிக்கைக்கு உச்ச நீதிமன்றம் மே 18** அன்று **ஒப்புதல்** அளித்துள்ளது.

## ➢ காவிரி வரைவு செயல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல் குறிப்புகள்

- காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக **தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி** ஆகிய 4 மாநிலங்களும் இனி **காவிரி மேலாண்மை ஆணையத்தையே அணுக** வேண்டும்.
- மத்திய அரசின் **உதவியை மட்டும் நாடலாம்.** இறுதி முடிவை எடுக்க **மத்திய அரசுக்கு அதிகாரம்** இல்லை.
- **காவிரி நீர் பங்கீடு, நீர் திறப்பு, கண்காணிப்பு, மேற்பார்வை** ஆகிய அனைத்து அதிகாரங்களும் **காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு** வழங்கப்படுகின்றன.

## ➢ காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைமை – புது டெல்லி

- காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் **தலைமை அலுவலகம் புது தில்லியில்** செயல்படும்

## ➢ காவிரி ஒழுங்காற்றுக் குழு தலைமை அலுவலகம் - பெங்களூரு

- காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் தலைமை அலுவலகம் **பெங்களூருவில்** அமைக்கப்படும்.

## ➢ அரியானாவில் "சத்ர பரிவஹுன் சுரக்சா யோஜனா" திட்டம் தொடக்கம்

- அரியான அரசு **'சத்ர பரிவஹுன் சுரக்சா யோஜனா' (Chatra Parivahan Suraksha Yojana)** என்ற **"பெண் குழந்தைகள்**

**மற்றும் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும்"** திட்டத்தை தொடங்கியுள்ளது.

## ➢ விஜய் பிரஹார் போர் பயிற்சி

- இந்திய இராணுவத்தின் தென்மேற்கு படைப் பிரிவானது **(South Western Command of the Indian Army) இராணுவத்தின் இணைந்து செயல்படும் தன்மையினை (army's jointmanship) மேம்படுத்துவதற்காக இந்திய விமானப் படையுடன் இணைந்து விஜய் பிரஹார் (Vijay Prahar) எனும் போர்** பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.
- விஜய் பிரஹார் போர் பயிற்சியானது **ராஜஸ்தான் மாநிலத்தின் சூரத்கருக்கு (suratgarh) அருகிலுள்ள மஹாஜன் (Mahajan)** பகுதியில் நடைபெற்றுள்ளது.

## ➢ பிரவாஸி பாரதிய திவாஸ்

- **2019ம் ஆண்டு**, ஜனவரி 21ம் தேதி முதல் 3ம் தேதி வரை உத்திரப் பிரதேச மாநிலத்தின் **வாரணாசியில் 15வது பிரவாஸி பாரதிய திவாஸ்** (15th Pravasi Bharatiya Divas) நடைபெற உள்ளது.
- இந்த 15வது பிரவாஸி பாரதிய திவாஸின் கருப்பொருள், **'புதிய இந்தியாவின் கட்டமைப்பில் இந்தியப் புலம்பெயர்ந்தோரின் செயற் பாத்திரம்" (Role of Indian Diaspora in building a New India)** என்பதாகும்.

## ➢ வருணா கடற்படை கூட்டுப் போர் பயிற்சி

- **ரீயூனியன் தீவுப் பகுதியில்** (Reunion Island) **இந்தியா** மற்றும் **பிரெஞ்ச்** கடற்படைகளானது வருணா கடற்படை கூட்டுப்போர் பயிற்சியின் மூன்றாவது மற்றும் கடைசி கட்டத்தை நடத்தியுள்ளன.
- இந்தியா மற்றும் பிரான்சிற்கு இடையேயான இருதரப்பு கடற்படை கூட்டுப் போர் பயிற்சியே **வருணா** (Varuna) ஆகும்.

➢ கொல்கத்தாவைச் சேர்ந்த **தானியா சன்யால் (Taniya Sanyal)** இந்தியாவின் முதல் பெண் தீயணைப்புப் படை வீராங்கனையாக (Woman Firefighter) உருவாகியுள்ளார்.

## ➢ ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ் அபியான்

- நாட்டின் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை பலப்படுத்தவும், அவற்றின் வெற்றிக்கு இடையூறாக இருக்கும் முக்கிய இடைவெளியை குறிப்பிடக் காட்டுவதற்காகவும் பிரதமர் ராஷ்டிரிய கிராம் ஸ்வராஜ் அபியான் திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.
- இத்திட்டம் மத்தியப் பிரதேச மாநிலத்தின் மண்ட்லா மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் இராம்நகர் மலைப்பகுதிகளில் தொடங்கப்பட்டது.

## ➢ இந்தியாவின் தூய்மையான நகரங்கள் பட்டியல் 2018

- **இந்தியாவின் தூய்மையான நகரங்கள் பட்டியலை (Swachh Survekshan 2018 Awards)** மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறத்துறை அமைச்சர் **"ஹர்தீப் சிங் புரி"** வெளியிட்டுள்ளார். அதன் விவரம்:

1. **இந்தூர் (மத்திபிரதேசம்)**
2. **போபால் (மத்திபிரதேசம்)**
3. **சண்டிகர் (சண்டிகர் யூ.பி.)**

## ➢ கோபர் தன் யோஜனா

- மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம் கோபர் தன் (கோபர் - உயிரி வேளாண் கரிம வளங்களை செயலாற்றத் தூண்டல் **GOBAR – Galvanizing Organic Bio – Agro Resources)** திட்டத்தை **கர்னலிலுள்ள** தேசிய பால் ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கியுள்ளது.

## ➢ அமெரிக்காவிலிருந்து LNG

- கச்சா எண்ணெய்யின் விலை உயர்வைத் தொடர்ந்து இந்தியா அமெரிக்காவிடமிருந்து இயறகை எரிவாயுவை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. 20 ஆண்டுகால ஒப்பந்தத்தின் கீழ் LNGயின் **(Liquefied Natural Gas – LNG)** முதல் வரவு (Shipment) லூசியானாவிலிருந்து தொடங்கியுள்ளது.
- MV மெரிடியன் ஸ்பிரிட் எனும் சார்ட்டர் கப்பல், 25 நாள் கடல் பயணத்திற்குப் பிறகு மஹாராஷ்டிராவின் தபோல் என்னும் இடத்திற்கு வந்தடைந்துள்ளது.

## ➢ பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம் - நீட்டிப்பு

- 12வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தையும் (12th Five Year Plan) தூண்டி 2019 – 20 ஆண்டு வரையிலும் பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம் (Pradhan Mantri Swasthya Suraksha Yojana – PMSSY) தொடர்வதற்கு பிரதமர் தலைமையிலான மத்திய கேபினேட் குழு அனுமதியினை வழங்கியுள்ளது.

## ➢ பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டம்

- **நாட்டில் தரமான மருத்துவ கல்வி கிடைப்பதற்காக மலிவான/நம்பகமான (affordable / reliable) மூன்றாம் நிலை சுகாதாரச் சிகிச்சை சேவைகள் (tertiary healthcare services) மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார** வசதிகளைப் பெறுவதில் காணப்படுகின்ற பிராந்திய சம நிலையின்மைகளை (regional imbalances) சரி செய்வதே பிரதான் மந்திரி சுவஸ்தியா சுரக்ஷா யோஜனா திட்டத்தின் நோக்கமாகும்.

## ➢ பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா

- **மத்திய அமைச்சரவை நாடு முழுவதும் 20 அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்களை (All India Institute for Medical Sciences – AIIMS) அமைத்தல்** மற்றும் 73 மருத்துவக் கல்லூரிகளை தரம் உயர்த்துதல் ஆகியவற்றிற்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த முடிவுகள் பிரதம மந்திரி ஸ்வஸ்தய சுரக்ஸ யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## ➢ 2018 பாதுகாப்பான இந்தியா மாநாடு

- பிரதமரின் தொலைநோக்குப் பார்வையான **'புதிய இந்திய : பாதுகாப்பான இந்தியா 2018' (New India : Secure India 2018)** என்ற இலக்கை மேம்படுத்தும் பொருட்டு 2018 பாதுகாப்பான இந்தியா மாநாடு **புதுதில்லியில்** உலகளாவிய தீவிரவாத தடுப்பு அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ➢ ஆயுஷ்மான் பாரத் தினம்

- கிராம சுயராஜ்ய அபியான் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக நாடு முழுவதும் **ஏப்ரல் 29ம் தேதி ஆயுஷ்மான் பாரத் தினம்** கொண்டாடப்பட்டது.
- ஆயுஷ்மான் பாரத் திட்டம் நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் மருத்துவ வசதிகளை எளிதாகவும் மலிவாகவும் கிடைக்கச் செய்யும் திட்டமாகும்.

## ➢ குழந்தைகளுக்கான சர்வதேச நாடகத் திருவிழா

- **கொல்கத்தாவில் குழந்தைகளுக்கான சர்வதேச நாடக விழாவில்,** இவ்விழாவை நடத்தும் இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 8 நாடுகளைச் சேர்ந்த பல்வேறு நாடகக் குழுக்களைச் சேர்த்து

குழந்தைகள் பங்கேற்க உள்ளனர்.

- இந்த 8 நாடுகளாவன : பிரான்சு, ஸ்லோவேனியா, சுவாசிலாந்து, மெக்சிகோ, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, நேபாளம் மற்றும் வங்க தேசம்.
- கொல்கத்தா எசோ நாடக் ஷிகி என்ற அமைப்பினால் நடத்தப்படும் இந்த விழா **'பாதுகாப்பான பயணம், பாதுகாப்பான வாழ்க்கை, பாதுகாப்பான குழந்தைகளின் வாழ்க்கை" (Safe Drive Save Life, Save Kids' Life')** என்ற கருப்பொருளில் அமைந்துள்ளது.

## ➢ பொலிவுறு நகரங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரிகளின் உச்சி மாநாடு

- மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரத்தில் பொலிவுறு நகரத்தில் பொலிவுறு நகரங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரிகளின் முதல் உச்சி மாநாடு நடத்தப்பட்டது.
- இது மத்திய நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.

## ➢ பிளாஸ்டிக் இல்லா பகுதி

- **உலக சுற்றுச்சூழல் தினத்தை (ஜூன் 5)** முன்னிட்டு, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நாட்டிலுள்ள அனைத்து பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்குத் தடைவிதித்ததோடு அப்பகுதிகளை பிளாஸ்டிக் இல்லா பகுதிகளாகவும் அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை இந்தியா நடத்தவுள்ளது.

### ➢ 6வது அமெரிக்கா - இந்தியா வான்போக்குவரத்து மாநாடு (6th United

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 244 344 www.weshineacademy.com

**States – India Aviation Summit) அண்மையில் 2018ம்** ஆண்டின் மே மாதம் 9ம் தேதி முதல் 11ம் தேதி வரை மஹாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் நடைபெற்றது.

## ➢ மூன்றாவது மிகப்பெரிய சூரியஒளி சந்தை

- மெர்கோம் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, சீனா மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு **2017ம் ஆண்டில் உலகின் மூன்றாவது மிகப்பெரிய சூரியஒளி சந்தையாக** இந்தியா உருவெடுத்துள்ளது.

## நெருக்கடி மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மையம்

- நெருக்கடி மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மையத்தினை **(Integrated Centre for Crisis Management – ICCM)** மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள **பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் (Bhabha Atomic Research Centre – BARC) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி** வைத்துள்ளார்.
- **இரசாயன வேதியியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணு சக்தி பொருட்களினால் உண்டாகும் (chemical, biological, radiological and nuclear – CBRN)** அவசர நிலைகளுக்கு மிகவும் திறம்பட்ட முறையில் பதிலெதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள இம்மையம் இந்தியாவிற்கு உதவும்.

## ➢ சமர்த் திட்டம்

- சமர்த் திட்டத்தினைப் (Samarth scheme) பற்றியும், அதனுடைய வழிகாட்டுதல்களைப் பற்றியும் சமர்த் திட்டத்தின் பங்குதாரர்கள் அறிந்து கொள்வதற்காக புது தில்லியில் திறன் **இந்தியா திட்டத்தின**

**(Skill India Mission) கீழ், சமர்த் திட்டத்தினுடைய** பங்குதாரர்கள் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

- **சமர்த் திட்டமானது ஜவுளித் துறையில்** உள்ள பங்குதாரர்களின் திறன்களை கட்டமைப்பதற்கான (Capacity Building Scheme) திட்டமாகும்.

## ➢ கிஷன்கங்கா நீர்மின் உற்பத்தித் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி 300 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட கிஷன்கங்கா நீர்மின் ஆற்றல் உற்பத்தி திட்டத்தை **(Kishanganga Hydroelectric Project) ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பந்திபோரா மாவட்டத்தில் துவக்கி** வைத்துள்ளார்.
- புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் துறையில் (Renewable Energy) இந்தியா மற்றும் பெரு நாடுகளுக்கிடையே ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

➢ இந்தியாவின் முன்னாள் அட்டர்னி ஜெனரலான (Attorney General of India) **முகுல் ரோஹத்கீ (Mukul Rohatgi)** பிரதமர் தலைமையிலான உயர்மட்ட **லோக்பால் தேர்ந்தெடுப்புக் குழுவில்** (high – profile Lokpal selection committee) மாண்புடைய நீதிபதியாக (Eminent jurist) நியமிக்கப்பட்டுள்ளார்.

## ➢ அறிவுசார் சொத்துரிமைக்கான சின்னம் - "IP நானி"

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு **"IP நானி"** எனும் அறிவுசார் சொத்துரிமைக்கான சின்னத்தை தொடங்கி வைத்துள்ளார்.

## ➢ 4-வது BRICS நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டு அமைச்சர் னுசு. ஹர்ஷ வர்தன், **தென்னாப்பிரிக்க நாட்டின் டர்பன்** நகரில் நடைபெற்ற 4வது பிரிக்ஸ் நாடுகளின் அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றினார்.


We Shine Academy

## ➢ இந்தியாவின் முதல் தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழகம்

- மத்திய அமைச்சரவை, இந்தியாவின் முதல் **தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழகத்தை மணிப்பூர் மாநிலத்தின்** இம்பாலில் (மேற்கு) அமைப்பதற்கான அவசரச் சட்டத்திற்கு முன்மொழிவு வழங்கியுள்ளது.

## ➢ போபால் நகரில் "தேசிய மனநல மறுவாழ்வு நிறுவனம்" (NMHR) – அமைச்சரவை ஒப்புதல்

- மத்திய பிரதேச மாநில தலைநகர் **போபால்** நகரில் **தேசிய மனநல மறுவாழ்வு நிறுவனத்தை (NMHR> National Institute of Mental Health Rehabilitation)** அமைக்க மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.

## ➢ வங்க தேச இல்லம்

- இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்கதேசப் பிரதமர் திருமதி. ஷேக் ஹசீனா ஆகியோர் மேற்கு வங்க மாநிலத்தின் சாந்தி நிகேதனில் உள்ள விஷ்வபாரதி பல்கலைக்கழகத்தில் வங்கதேச இல்லத்தை தொடங்கி வைத்தனர்.
- **2018 ஆம் ஆண்டு காந்தி** பிறந்த நாளான **அக்டோபர் 2** அன்று முதல் **மத்தியப் பிரதேசம், திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத (Open Defecation Free (ODF) மாநிலமாக** அறிவிக்கப்பட்ட உள்ளதாக அம்மாநில **முதல்வர் சிவராஜ் சிங் சவுகான்** தெரிவித்துள்ளார்.

➢ பஞ்சாப் மாநிலத்தின் **"பக்வாரா" நகரில் முழுக்க பெண்களால் இயங்கும் முதல் அஞ்சல் அலுவலக பாஸ்போர்ட் சேவை மையத்தை** மத்திய மந்திரி விஜய் சம்ப்லா மே 14 அன்று தொடங்கி வைத்தார்.

❖ நாட்டின் **192வது அஞ்சல் அலுவலக பாஸ்போர்ட் சேவை மையம்** இதுவாகும்.

## ➢ தெலுங்கான மாநிலத்தில் "ரைத்து – பந்து" திட்டம் - தொடக்கம்

- தெலுங்கான அரசு, கரீம்நகர் மாவட்டத்தில் உள்ள தர்மராஜ்பள்ளி, இந்திராநகர் கிராமத்தில், மே 10, 2018 அன்று **ரைத்து – பந்து (Rythu Bandhu) என்ற "விவசாயிகளின் நண்பர் என்ற பொருள்படும் திட்டத்தை"** தொடக்கியுள்ளது.
- விவசாயிகளுக்கு **முதலீட்டுக்கு ஆதரவு வழங்கும் இந்த திட்டத்தின் கீழ்,** ஒரு விவசாயி ஒரு வருடத்தின் இரண்டு பருவத்திற்கும், **ஒரு ஏக்கருக்கு 4,000 ரூபாய்** பெறுவார்.

➢ நாடாளுமன்ற மாநிலங்களவை விதிகளை மறு ஆய்வு செய்ய குழ ஒன்றை, மாநிலங்களவை அவையின் தலைவரும், **குடியரசு துணைத்தலைவருமான வெங்கய்ய நாயுடு,** மாநிலங்களவை முன்னாள் பொதுச் செயலர் **"வி.கே. அக்னிகோத்ரி" தலைமையில் 2 பேர் குழுவை** வெங்கய்ய நாயுடு அமைத்துள்ளனர்.

➢ இந்தியாவில் **மேற்கு ரயில்வே, மும்பை நகரில் "சர்ச்கேட் மற்றும் போரிவலி ரெயில்** நிலையங்களுக்கு இடையே முதல் மகளிர் சிறப்பு ரெயில்" சேவை 1992ம் ஆண்டு மே 5 ஆம் தேதி தொடங்கப்பட்டது. இது **"உலகின் முதல் மகளிர் சிறப்பு ரெயில்"** ஆகும். இந்த சிறப்பு ரெயில் **மே 5 2018 நாளுடன், 26 வருடங்களை நிறைவு** செய்துள்ளது.

## ➢ 2018 பெண்கள் பாதுகாப்பு ஆண்டு – ரெயில்வே கடைபிடிப்பு

- **2018** ஆம் ஆண்டை **"பெண்கள் பாதுகாப்பு ஆண்டாக" ரெயில்வே** கடைபிடித்து வருகிறது. இதை முன்னிட்டு தற்போது, ரெயில்களில் பெண்கள் பெட்டி, ரெயிலின் பின்பகுதியில் இடம் பெற்றுள்ளது. அதை மாற்றி, **ரெயிலின் நடுப்பகுதியில் பெண்கள் பெட்டியை வைக்க ரெயில்வே அமைச்சகம் முடிவு** செய்துள்ளது.
- பெண்கள் பெட்டியை எளிதில் அடையாளம் காண அதற்கு **தனி**

**இளஞ்சிவப்பு நிறம் வண்ணம் பூச முடிவு** செய்யப்பட்டுள்ளது.

## ➢ 2018 விஜய் விஹார் பயிற்சி இராணுவப்பயிற்சி – தொடக்கம்

- **இராஜஸ்தான் மாநிலத்தில் "சூரத்கா்க்"** அருகே இந்திய இராணுவத்தின் தென்மேற்கு கட்டளை அமைப்பின் **"விஜய் பிரஹர் பியிற்சி" (VIJAY Prahar 2018),** தொடங்கியுள்ளது, **மே 9 அன்று** பயிற்சிகள் நிறைவடைகின்றன. இப்பயிற்சியை **இந்திய இராணுவம் மற்றும் விமானப்படை (IAF)** இணைந்து நடத்துகின்றன.

## ➢ அரியானாவில் "கோபர்தான் (GOBAR – DHAN) திட்டம்" தொடக்கம்

- 2018ம் ஆண்டு மே 1 அன்று **அரியானாவில்** உள்ள கா்னால், தேசிய பால் ஆராய்ச்சி மையத்தில், **கோபர்தான் (GOBAR-DHAN)** திட்டத்தை **மத்திய அமைச்சர் உமா பாரதி** தொடங்கி வைத்தார். கோபர்தான் திட்டம், **கால்நடை மற்றும் கரிம கழிவு** இருந்து **ஆற்றலை உருவாக்கும்** திட்டம் ஆகும்.

- GOBAR – DHAN Galvanizing Organic Bio – Agro Resources – DHAN

## ➢ ஜவஹர்லால் நேருவின் அரிய புகைப்பட வரலாறு – புத்தகம் வெளியீடு

- தமிழ்நாடு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் **கோபண்ணா, 'ஜவஹர்லால் நேருவின் அரிய புகைப்பட வரலாறு'** என்ற புத்தகத்தை எழுதி உள்ளார். நேருவின் 700 அரிய புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளது. நேரு நினைவு நாளான **மே 27 அன்று டெல்லியில், புத்தகத்தை முன்னாள் குடியரசுத்தலைவர் பிரணாப்**

**முகர்ஜி** வெளியிட, முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் பெற்றுக் கொண்டார்.

- **தரமான மருத்துவ வசதி கிடைக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 145 ஆவது இடத்திலுள்ளது.**

- **உலகின் செல்வச் செழிப்பான நாடுகளின் பட்டியலில் இந்தியா ஆறாம் இடம் பிடித்துள்ளது.** அதுமட்டுமன்றி, அடுத்த 10 ஆண்டுகளில் இந்தப் பட்டியலில் நான்கு அல்லது ஐந்தாவது இடத்தில் இந்தியா இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

- **'நாவிகா சாகர் பரிக்கிரமா' (Navika Sagar Parikrama) என்ற பெயரில், முழுவதும் பெண் கடற்படை வீராங்கனைகளைக் கொண்டு, இந்திய கடற்படையின் 'ஐ.என்.எஸ். தாரிணி' (INSV Tarini) உலகை சுற்றும் தனது பயணத்தை 21 மே 2018 அன்று நிறைவு செய்தது.** கடந்த 254 நாட்கள் பயணத்தில் 'ஐ.என்.எஸ். தாரிணி' சுமார் 22,000 கடல் மைல்களை கடந்துள்ளது.

- மத்திய பஞ்சாயத்து ராஸ் அமைச்சகத்தினால் (Ministry of Panchayati Raj) நாட்டின் **சிறந்த கிராமப் பஞ்சாயத்தாக (best Gram Panchayat)** கொல்கத்தாவிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள **திகம்பர்பூர்** (Digambarpur) கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- அருணாச்சலப் பிரதேச மாநில முதல்வாரன பேமா காண்டு (Pema Khandu) மாநிலத் தலைநகரான **இட்டா** நகரில் உள்ள ஆற்றல் விழிப்புணர்வு பூங்காவில் **(Energy Awareness Park) மாநிலத்தின் மிகப்பெரிய சூரியஒளி மின்நிலையத்தை (solar power plant)** துவக்கி வைத்துள்ளார்.

## ➢ இ-விசா திட்டம் (2014)

- **2014ம் ஆண்டு நவம்பர் 27ம் தேதி** ஆன்லைன் வாயிலாக வெளிநாட்டுப் பயணிகளுக்கு அனுமதி அளிக்கும் **இ-விசா திட்டத்தை அறிமுகம்** செய்தது. இத்திட்டத்தின் கீழ் தற்போது மொத்தம் 163 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் இ - விசா வசதி பெற்று வருகின்றனர்.

## ➢ "நிபா" வைரஸ்

- **விலங்குகளில் இருந்து மனிதனுக்கு பரவும்** மற்றொரு உயர்க்கொல்லி **வைரசான நிபா,** முதன் முதலில் **மலேசியாவின் கம்பங் சுங்கய் நிபாவில்** கடந்த **1998-ம் ஆண்டு** கண்டறியப்பட்டது. **'நிபா'** என்ற இடத்தில் கண்டறியப்பட்டதால் **'நிபா'** என்ற பெயரிலேயே இது அழைக்கப்படுகிறது.

## ➢ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பினைப் பற்றி

- சீனாவின் பெய்ஜிங் - ஐ தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது யூரேஸியப் பிராந்தியத்தின் (Eurasian) ஓர் அரசியல் பொருளாதார, பாதுகாப்பு அமைப்பாகும்.
- 2001ம் ஆண்டு இது நிறுவப்பட்டது.

**➢ இதன் முழு நேர உறுப்பினர்களாவன**

- ❖ சீனா
- ❖ இரஷ்யா
- ❖ கஜகஸ்தான்
- ❖ உஸ்பெகிஸ்தான்
- ❖ தஜிகிஸ்தான்
- ❖ கிர்கிஸ்தான்
- ❖ இந்தியா
- ❖ பாகிஸ்தான்

## ➢ ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (2016) – குறிப்புகள்

- **ஆசியாவில் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 100 பில்லியன் டாலர்** முதலீட்டில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB, Asian Infrastructure Investment Bank) **2016 ஜனவரி 16** அன்று உருவாக்கப்பட்டது.
- ஆசிய நாடுகளின் உள்கட்டமைப்பு பணிகளுக்கு தேவைப்படும் நிதியை இந்த வங்கி வழங்கும். **இந்தியா, சீனா போன்ற முக்கிய நாடுகள்** இணைந்து உருவாக்கியுள்ள இந்த வங்கி சீனா தலைநகர் **பீஜிங்கை தலைமையிடமாக** கொண்டு செயல்படுகிறது.

## ➢ தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் பேரிடர் மேலாண்மைக்கான நாட்டின் உச்ச சட்ட அமைப்பாகும். இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இதன் விதிமுறைகள் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005 (Disaster Management Act, 2005) என்ற சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.
- இது 2009ம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இந்தியப் பிரதமரைத் தலைவராகக் கொண்ட 9 உறுப்பினர்கள் அடங்கிய குழுவால் தேசிய பேரிடர் மேலாண்மை நிர்வகிக்கப்படுகின்றது.

# உலக நிகழ்வுகள்

- ➢ **‘ஷாங்காய் அமைப்பின்’ தீவிரவாதத்திற்கெதிரான பிராந்திய கூடுகை (SCO Regional Anti – Terrorist Structure) 23 மே 2018** அன்று பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்றது.
- ➢ கியூபா நாட்டின் அதிபராக மிகுயெல் டையஸ் - கேனெல் **(Miguel Diaz-Canel)** அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

- 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரஷ்யாவில் நடைபெற்ற உள்ள **அமைதி திட்டம் (Peace Mission)** எனும் பன் - **நாட்டு பயங்கரவாத எதிர்ப்பு கூட்டுப்போர் பயிற்சியில் (multi – nation counter – terror exercise)** பரம போட்டி நாடுகளான **இந்தியாவும், பாகிஸ்தானும்** முதல் முறையாக பங்கெடுக்க உள்ளன.

- எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் (Reporters Without Borders) அமைப்பால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2018ம் ஆண்டிற்கான **உலக பத்திரிக்கைச் சுசதந்திரக் குறியீட்டில் (World Press Freedom Index – WPFI) 2017ம்** ஆண்டின் பத்திரிக்கைச் சுதந்திரத்தினுடைய நிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உலகம் தழுவிய கணக்கெடுப்பில் 180 நாடுகளுள் **இந்தியா 138வது** இடத்தைப் பிடித்துள்ளது.

- அயர்லாந்து நாட்டில் **கருக்கலைப்பு செய்வதற்கு அனுமதி அளித்து சட்டம்** இயற்றப்படவுள்ளது. இதன்படி **12 வாரம் முதல் 24 வாரம்** வரையிலான கருவால் தாயின் உயிருக்கு ஆபத்து நேரும் என்றால் அந்த கருவை கலைக்க அனுமதி கிடைக்கும்.

- வடகொரியாவின் ஒரே **அணு ஆயுத** சோதனை தளமான **புங்கியே-ரி சோதனை தளத்தை,** வெளிநாட்டு பத்திரிக்கையாளர்கள் முன்னிலையில் வெடி வைத்து **மே 24 அன்று** தகர்த்துள்ளது.

- மேற்கு வங்க மாநிலம் பிர்பம் மாவட்டம், **சாந்தி நிகேதனில்** செயல்படும், **விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில்,** வங்கதேச போர் தொடர்பான வரலாற்று ஆவணங்களை பாதுகாக்கவும், இந்தியா வங்கதேச உறவை பிரதிபலிக்கும் வகையில், **வங்கதேச அரசு சார்பில்** ரூ.25 கோடியில் **'வங்கதேச பவன்' என்ற பெயரில் அருங்காட்சியகம்,** கட்டப்பட்டுள்ளது.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 244 344 www.weshineacademy.com

- இந்த **‘வங்கதேச பவன்’** அருங்காட்சியகத்தை, **பிரதமர் நரேந்திர மோடி, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா மே 25** அன்று திறந்து வைத்தனர்.

## செவ்வாய் கிரகத்தில் துளையிட்டு NASA-வின் கியூரியாசிட்டி விண்கலம் - சாதனை

- 60 மில்லியன் மைல் தொலைவிற்கப்பால் **செவ்வாய் கிரகத்தில் 2 அங்குல துளையிட்டு,** அமெரிக்காவின் விண்வெளி நிறுவனத்தின் **(NASA) கியூரியாசிட்ட ரோவர் விண்கலம்** சாதனைப் படைத்துள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது குறித்து ஆராய **நாசா சார்பில் கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் அனுப்பி** வைக்கப்பட்டது.

## 2018 இந்தியா – நேபாளம் கூட்டு ராணுவ பயிற்சி “சூர்ய கிரண் 2018”,

- **இந்தியா மற்றும் நேபாளம்** ராணுவத்தினர் இணைந்து பங்கேற்கும் **13வது கூட்டு ராணுவ பயிற்சி “சூர்ய கிரண் 2018”, மே 31 முதல் ஜூன் 12, 2018** வரை, **உத்தரகாண்ட் மாநிலம் பிதோரகார்** பகுதியில் நடைபெறுகிறது.
- இப்பயிற்சிக்கு **“சூர்ய கிரண் XIII”** என்று பெயரிடப்பட்டுள்ளது. **பயங்கரவாத தடுப்பு முயற்சியை இருநாடுகளும் தீவிரப்படுத்துவதை நோக்கமாக** வைத்து இப்பயிற்சி நடைபெறுகிறது.

- **டிரிப் அட்வைசர்** எனும் தனியார் அமைப்பு, **“பயணிகள் அதிகம் விரும்பும், உலகின் முக்கிய சுற்றுலா தலங்கள்”** தொடர்பாக ஆய்வு ஒன்றை நடத்தியது. இதில் **இந்தியாவின் “தாஜ்மகால்” ஆறாம் இடத்தைப்** பிடித்துள்ளது.

✓ **தரவரிசை** – நாடுகள்

- ❖ கம்போடியா – அங்கோர்வாட்
- ❖ பிளாசா டி எஸ்பனா - ஸ்பெயின்
- ❖ ஷேக் சையத் மசூதி – அபுதாபி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ

## ➢ "VINBAX 2018"

- சார்பில் **INS சஹ்யாயத்ரி, INS கமோர்டா, INS சக்தி** ஆகிய கப்பல்கள் பங்கேற்கின்றன.
- **இந்தியா – வியட்நாம்** இடையே **முதலாவது கடற்படை கூட்டுப்பயிற்சி, வியட்நாம்** நாட்டின் **டீன் சா** துறைமுகத்தில் **மே 21 முதல் 25** வரை நடைபெறுகிறது.
- இக்கடற்படை கூட்டுப்பயிற்சிக்கு **"VINBAX 2018"** என்று பெயரிடப்பட்டுள்ளது.

## ➢ உலகின் முதல் மிதக்கும் அணுசக்தி நிலையம் - இரஷ்யாவில் - தொடக்கம்

- உலகின் **முதல் மிதக்கும் அணுசக்தி நிலையம்** (World's first floating nuclear power station), **இரஷ்யா நாட்டின், முர்மாஸ்கன் துறைமுகத்தில்** தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. **"அகாடமிக் லொமோனோசோவ்" (Akademik Lomonosov)** என்று இந்த மிதக்கும் அணுசக்தி நிலையத்திற்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது.

➢ சீன விண்வெளி ஆராய்ச்சி நிலையம், **மே 21 அன்று "குயூகியா" (Queqlao)** என்ற செயற்கை கோளை **"நிலவின் இருண்ட பக்கத்தை ஆராய்ச்சி செய்வதற்காக"** செலுத்தியுள்ளது.

➢ **அரபிக் கடலில்,** ஏடன் வளைகுடாவில் காற்றழுத்த தாழ்வு பகுதி புயலாக (மே 19) மாறியுள்ளது. **புதிய புயலுக்கு, 'மேகுனு' என்ற பெயர்** வைக்கப்பட உள்ளது. **மேகுனு என்ற பெயர், மாலத்தீவு** நாட்டின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

- தென்மேற்கு அரபிக்கடலில் **ஏடன் வளைகுடா பகுதியில் புயல் (மே 17)** உருவாகி உள்ளது. இதற்கு **“சாகர்” (Cyclone Sagar)** என்று பெரிடப்பட்டுள்ளது. இந்த பெயரை **“இந்தியா”** சூட்டியுள்ளது.
- 2004ம் ஆண்டில் இருந்து புயலுக்கு பெயர் வைக்கப்படுகிறது. இந்த **“சாகர்” புயல் 50-வது புயல்** ஆகும்.
- **தேர்தல் மேலாண்மை மற்றும் நிர்வாகத்துறையில்** ஒத்துழைப்புக்கான **இந்தியா – கரிநாம் நாடுகளிடையே புரிந்துணர்வு** ஒப்பந்தத்திற்கு **பிரதமர் நரேந்திர மோடி** தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- **சட்டத்துறையில் இந்தியா மற்றும் மொரோக்கோ நாடுகள்** இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு **பிரதமர் நரேந்திர மோடி** தலைமையிலான மத்திய அமைச்சரவை பின் ஏற்பு ஒப்புதல் அளித்துள்ளது. **சட்டம் மற்றும் சட்டம் இயற்றல் துறையில்** அனுபவங்கள் மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ள இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.
- **உலக சுகாதார அமைப்பு (WHO),** 2023ம் ஆண்டிற்குள் உலகளாவிய அளவில், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் **“செயற்கை கொழுப்பு உணவுகளை” அகற்றுவதற்கான ஒரு முழுமையான “REPLACE” என்ற திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.

- **“REPLACE”** என்பதன் விரிவாக்கம், **REview, Promote, Legislate, Assess, Create, Enforce** என்பதாகும்.

## அருண் - III நீர் - மின்சக்தித் திட்டம்

- **நேபாளத்தில் 900** மெகாவாட் **நீர் - மின்சக்தித் திட்டத்திற்கான (அருண் - III)** அடிக்கல்லை **இரு பிரதமர்களும்** இணைந்து நாட்டினர்.

- சீன நாட்டின், **இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பலின் சோதனை ஓட்டம் மே 13** அன்று லயோனிங் மாகாணத்தில் உள்ள டாலியன் கப்பல் கட்டும் தளத்தில் தொடங்கியது.

- ❖ இந்த விமானம் தாங்கி போர்க்கப்பலுக்கு **"Type 001A"** என்று பெயரிடப்பட்டுள்ளது. முற்றிலும் **உள்நாட்டில் வடிவமைத்து கட்டப்பட்ட முதலாவது விமானம் தாங்கி போர்க்கப்பல்** இதுவாகும்.

➢ **குங்ஹாய் - திபெத்** ரயில் பயணம்தான் **உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள ரயில் பாதை** ஆகும். இது **சீனாவின் குங்ஹாய் நகரிலிருந்து திபெத்தின் லாசா நகரம் வரை 1,910 கி.மீ தூரம்** கொண்டது. இந்த ரயில் பாதை **'தங்குலா கணவாய்'** என்ற பகுதியை கடந்து செல்கிறது.

➢ **2018 மே 5** அன்று, **NITI Aayog அமைப்பு மற்றும் IBM நிறுவனம்** ஆகியவற்றுக்கிடையே, **செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொழில்நுட்பத்தை** பயன்படுத்தி, **துல்லியமான விவசாயம், பயிர் விளைச்சல் கணிப்பு மாதிரியை உருவாக்கும்,** திட்ட நோக்க (Statement of Intent) **ஒப்பந்த அறிக்கையில்** கையெழுத்திட்டுள்ளன.

➢ செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கி அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் **"இன்சைட்" (InSight Mars lander)** ஆய்வுக் கலத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான **யௌயஇ வெற்றிகரமாக விண்ணில்** செலுத்தியது.

➢ **"அட்லஸ் 5" (Atlas V) ராக்கெட்** மூலம் இந்த அதிநவீன ஆய்வுக் கலம் மே 5 அன்று, கலி∴போர்னியா மாகாணத்திலுள்ள **வாண்டென்பர்க் விமானப்படை** தளத்திலிருந்து, ஏவப்பட்டது. **2018 நவம்பர் மாதம் 26ம் தேதி** செவ்வாய் கிரகத்தில் தரையிரங்குகிறது.

## ➢ உலக நாடுகளின் ராணுவச் செலவுப் பட்டியல் (முதல் 5 நாடுகள்)

1. அமெரிக்கா – 61,000 கோடி டாலர்
2. சீனா – 22,800 கோடி டாலர்

3. சவுதி அரேபியா – 6940 கோடி டாலர்

4. ரஷ்யா – 6630 கோடி டாலர்

5. **இந்தியா – 6,390 கோடி டாலர்**

- ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் **கென்யா மற்றும் பப்புவா நியூ கினியா** ஆகிய நாடுகள் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளன. தற்போது AIIB-யில் அங்கீகரிக்கப்பட்ட **உறுப்பினர்களாக 86 நாடுகள்** உள்ளன.

## பாலிகட்டான் இராணுவப் பயிற்சி

- **அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ்** ஆகிய இருநாடுகளும் 34வது மிகப்பெரிய வருடாந்திர இருதரப்பு இராணுவப் பயிற்சியான பாலிகட்டானைத் தொடங்கியுள்ளன. பாலிகட்டான் எனும் பிலிப்பைன் வார்த்தைக்கு **'புயம் முதல் புயம்' (Shoulder to Shoulder)** அல்லது ஒருவருக்கொருவர் சுமைகளை பரிமாறிக் கொள்ளுதல் என்று பொருள்.

- 2015ம் ஆண்டின் பருவநிலை மாறுபாடு மீதான பாரிஸ் உடன்படிக்கைக்கான **(Paris Agreement on Climate Change)** பணி பொறுப்புடைமை ஏற்புகளை (commitments) மதிப்பாய்வு செய்வதற்காக **2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் பருவநிலை மாநாடு (climate summit)** நடைபெறும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் **(Antonio Guterres)** அறிவித்துள்ளார்.

- கண்பார்வையிழப்பை ஏற்படுத்தும் உலகின் முன்னணி தொற்றாக கருதப்படுகிற டிரக்கோமாவ ஒழித்த WHOவின் தென்கிழக்கு ஆசிய மண்டலத்தின் முதல் நாடாக நேபாளம் உருவாகியுள்ளது.

- 71வது உலக சுகாதார மன்றம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவில் நடைபெற்றது.

- இந்த நிகழ்ச்சியானது, “அனைவருக்கும் சுகாதாரம்: உலகளாவிய சுகாதார உள்ளடக்கத்திற்கு உறுதியளிப்பு” (Health for All : Commit to Universal Health Coverage) எனும் கருத்துருவின் அடிப்படையில் நடைபெற்றது.

➢ அமெரிக்கா தயாரித்த **F-35** இரகசிய போர்விமானத்தை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்திய முதல் நாடு **இஸ்ரேல்** ஆகும்.

➢ லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, கூட்டு போர் தாக்குதல் விமானம் என்றும் அறியப்படும் F-35 விமானம் இஸ்ரேலில் ஹீப்ரு பெயரில் பலமான அல்லது அடிர் என்றும் அழைக்கப்படுகிறது.

➢ **சீனா – பாகிஸ்தான் வான்வழி அச்சுறுத்தல்கள் எதிர்கொள்ள ரஷ்யாவிடம் இருந்து S-400 டிரையூம்ப் விமான பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.** S-400 டிரையூம்ப் ஏவுகணைகள் நொடிக்கு 4.8 கிலோமீட்டர் வேகத்தில் கூடியது பயணிக்க முடியும். (17,000 கிமீ/மணி, Mach 14) இது நான்காவது தலைமுறை நீண்ட தூர ரஷ்ய மேற்பரப்பு – வான் - ஏவுகணைகள் ஆகும்.

➢ **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா மற்றும் அங்கோலா இடையே புரிந்துணர்வு** ஒப்பந்தத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் 23.05.2018 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

➢ **‘சுரிநாம் குடியரசு’ (Republic of Suriname) நாட்டிற்கான இந்திய தூதராக மகேந்தர் சிங்** கன்யால் நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ **‘மவுரிடானியா இஸ்லாமிய குடியரசு’ (Islamic Republic of Mauritania) நாட்டிற்கான இந்திய தூதராக பிரதீப் குமார் குப்தா** நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ **‘தென் சூடான் குடியரசு’ (Republic of South Sudan) நாட்டிற்கான இந்தியாவின் தூதராக எஸ்.டி.மூர்த்தி** நியமிக்கப்பட்டுள்ளார்.

- **6வது அமெரிக்க - இந்தியா வான்வெளிப் பயணக் கூடுகை (6th US - India Aviation Summit) 9 மே 2018 அன்று மும்பையில் நடைபெற்றது.** இந்த கூடுகையானது இந்திய உள்நாட்டு விமான போக்குவரத்து அமைச்சகம் மற்றும் அமெரிக்க வணிகம் மற்றும் வளர்ச்சி முகமை (US Trade and Development Agency (USTDA)) ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.

- **'ஹரிமாவு சக்தி 2018' (Harimau Shakti)** என்ற பெயரில் இந்தியா – மலேசியா நாடுகளின் கூட்டு இராணுவப் பயிற்சி மலேசியாவின் ஹீலு லங்காத் காடுகளில் நடைபெற்றது.

- **'NATO' எனப்படும் 'வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தில்' (North Atlantic Treaty Organization) புதிதாக கொலம்பியா (Columbia) நாடு இணைந்துள்ளது.** கொலம்பியா தான் இவ்வமைப்பில் இணையும் முதல் லத்தீன் அமெரிக்க நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

- **'ரிம் ஆ∴ப் பசிபிக்' (Rim of the Pacific (RIMPAC)) என்ற பெயரில் நடைபெறும் 26 நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப் பயிற்சி** 27 ஜூன் 2018 முதல் 2 ஆகஸ்டு 2018 வரையில், "தகுதிவாய்ந்த, ஏற்றுக்கொள்ளத்தக்க, பங்காளிகள்' (Capable, Adaptive, Partners) எனும் நோக்கத்தை மையமாகக் கொண்டு, தென் கலி∴போர்னியாவிலுள்ள ஹவாய் தீவுகளில் நடைபெறவிருக்கிறது. இந்த பயிற்சியில் இந்தியாவும் கலந்து கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

- **நிலவில் நடந்த நான்காவது நபரான 'ஆலன் பீன்' (Alan Bean) 27-08-2018 அன்று காலமானார்.** 'Apollo 12' ல் நீல் ஆம்ஸ்ட்ராங், பஸ் ஆல்டிரின், சார்லஸ் பீடே கோன்ராட் ஆகியோருடன் நிலவுக்கு சென்ற ஆலன் பீன் 19 நவம்பர் 1969 அன்று நான்காவது நபராக நிலவில் காலடி எடுத்து வைத்தார்.

- **'பிம்ஸ்டெக்' (Bay of Bengal Initiative of Multi – Sectoral Technical and Economic Cooperation Summit (BIMSTEC)) அமைப்பின் 2018 ஆவது ஆண்டிற்கான கூடுகை நேபாளத்தில் நடைபெறவுள்ளது.**

❖ **'பிம்ஸ்டெக்' (BIMSTEC) அமைப்பு பற்றி**

- 6 ஜூன் 1997 ஆம் ஆண்டு பாங்காக் பிரகடனத்தின் மூலம் உருவானது.
- தலைமையிடம் பங்காளதேச நாட்டின் டாக்கா நகரில் உள்ளது.
- இவ்வமைப்பில் பங்காள தேசம், இந்தியா, பூடான், நேபாளம், மியான்மர், ஸ்ரீலங்கா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

# வர்த்தக நிகழ்வுகள்

- **இந்தியாவின் நடப்புக்கணக்கு பற்றாக்குறை, 2017-18** ஆம் நிதி ஆண்டில் **8,061 கோடி டாலராக** உயர்ந்துள்ளது. கடந்த 2017-17ம் நிதி ஆண்டில் நடப்புக்கணக்கு பற்றாக்குறை **4,179 கோடி** டாலராக இருந்தது.

- நடப்புக்கணக்கு என்பது **மொத்த அன்னிய செலாவணி செலவிற்கும், வருவாய்க்கும் இடையிலான வித்தியாசமாகும்.** வர்த்தக பற்றாக்குறை (சரக்குகள் இறக்குமதிக்கும், ஏற்றுமதிக்கும் இடையிலான வித்தியாசம்) அதிகரிக்கும் போது **நடப்புக்கணக்கு பற்றாக்குறையும்** அதிகரிக்கிறது.

- **மொத்த விலை பணவீக்கத்தை** கணக்கிடுவதற்கான அடுத்த **அடிப்படை ஆண்டை 2017-18 ஆக நிர்ணயிக்க** மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- தற்போது முக்கிய பொருளாதார குறியீடுகளை கணக்கிடுவதற்கான **அடிப்படை ஆண்டு 2011-12 ஆக** இருக்கிறது.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 244 344 www.weshineacademy.com

- ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான **ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக ஆணையத்தின் ஆய்வறிக்கை** தகவலின்படி, **2017ம் ஆண்டில் இந்திய பொருளாதாரம் 6.6% மட்டுமே வளர்ச்சி** கண்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் வளர்ச்சி விகிதம் **7.1 சதவீதமாக** இருந்தது.

- **2018-19ம்** ஆண்டில் **இந்தியா வேகமாக வளரும் ஆசிய நாடாகவும்,** இதன் **வளர்ச்சி 7.3%** இருக்கும் என்று, **ஆசிய வளர்ச்சி வங்கி** (Asian Development Bank), கணித்துள்ளது. **2019-20** ஆண்டுகளில் **7.6% ஆக இருக்கும்** என தெரிவித்துள்ளது.

- மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள **GSTN (GOODS AND Services Tax Network)** நிறுவனத்தில் தற்போது, **மத்திய, மாநில அரசுகளின் பங்கு தலா 24.5 சதவீதமாகவும், மீதம் உள்ள 51 சதவீத பங்கு பிற தனியார் நிறுவனங்களின்** (வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்) பங்காக உள்ளது.

- GSTN நிறுவனத்தில் தனியாருக்கு உள்ள **51 சதவீத பங்குகளையும் அரசாங்கமே வாங்கி, இந்த நிறுவனத்தை முழுக்க முழுக்க அரசு நிறுவனமாக மாற்றுவது** என்று முடிவு செய்யப்பட்டது.

- **2018 ஏப்ரல்** மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் **ரூ.1 லட்சத்து 3 ஆயிரத்து 458 கோடி** வசூல் ஆகியுள்ளது. ஜி.எஸ்.டி. 2017 ஜூலை 1 முதல் அமலுக்கு வந்த பிறகு, **ஒரே மாதத்தில் இவ்வளவு வரி வசூலானது இதுவே முதல்முறை** ஆகும்.

- 2017ல் ஏறக்குறைய 69 பில்லியன் டாலர் பணம் செலுத்தல்களைப் (Remittances) பெற்று, சமீபத்திய உலக வங்கியின் இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டு அறிக்கையின்படி பணம் செலுத்தல்களின் பெறுநர் வரிசையில் இந்தியா முதலிடத்தை தக்க வைத்துள்ளது.

- **ராஜஸ்தானின் பொது நிதி மேலாண்மை திட்டத்தை வலுப்படுத்துவதற்காக, உலக வங்கியுடன் 21.7 மில்லியன் டாலர் கடனுதவிக்கான ஒப்பந்தத்தில்** இந்தியா 29-05-2018 அன்று கையெழுத்திட்டுள்ளது.

- **இந்திய அரசின் கிராமப்புற சாலைகள் திட்டமான 'பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா' (Pradhan Mantri Gram Sadak Yojana (PMGSY)) விற்காக, இந்திய அரசு மற்றும் உலக வங்கியிடையே ரூ.500 மில்லியன் அமெரிக்க டால் கூடுதல் கடனுதவி ஒப்பந்தம்** செய்யப்பட்டுள்ளது.

- **எத்தனால் மீது விதிக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டி வரியை 18 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைப்பது என்று ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாக** மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக போர் விமானமாக தே**ஜஸ், டெர்பி என்ற (வான் - வான்) கண்ணுறு தொலைவிற்கு** அப்பாலான ஏவுகணையை **கோவா கடற்பகுதியில்** வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- இந்த வெற்றிகரமான சோதனையானது, ஒரு திறனான **ஒலியை விட வேகமாக** செல்லும் போர் விமானம் எனும் வகையில் தேஜஸின் ஒட்டு மொத்த திறனையும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

- CSIR –NPL (தேசிய இயற்பியல் ஆய்வகம்) மற்றும் தொலைத் தொடர்புத்துறை ஆகியவை தேசிய அளவிலான நேர முத்திரையிடல் நேர ஒத்திசைவு வலைப்பின்னலை (Time Stamping and Time Synchronization

Network – TSTSN) நிறுவுவதற்கும், தேசிய இயற்பியல் ஆய்வகத்தின் UTC (Coordinated Universal Time) **நேரத்திற்கு நேர சமிக்ஞையை** கண்டறிதல் ஆகியவற்றிற்காக தொழில்நுட்ப அறிவை பரிமாற்றுதல் மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- பாபா அணு ஆராய்ச்சி மையமானது (Bhabha Atomic Reseacrch Centre – BARC) **பாபா கவாச் (Bhabha Kavach)** எனும் அடுத்த தலைமுறை குண்டு துளைக்காத கவச ஆடையை (next – generation bulletproof jacket) உருவாக்கி உள்ளது.

- **பெட்ரோலியம் மற்றும் நிலக்கரி போன்ற புதைபடிம** எரிபொருட்களிலிருந்து **சல்பரை நீக்கும் 4 பாக்டீரிய மரபியற் மாற்றுருக்களை** (Bacterial strains) அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் (Council of Scientific & Industrial Research) தனிமங்கள் மற்றும் பொருள் தொழில்நுட்ப நிறுவனத்தைச் (Institute of Minerals and Materials Technology) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் **'ஸ்வயம்'** எனும் முன்முயற்சியை துவங்கியுள்ளது. MOOC (Massive Open Online Course) எனப்படும். மிகையான திறந்தநிலை இணையதள படிப்புத் தளமான ஸ்வயத்தினைப் பயன்படுத்தி 1.5 மில்லியன் **உயர்கல்வி ஆசிரியர்களின் தகுதி முறையை இணையதளவழியில் மேம்படுத்த** திட்டமிட்டுள்ளது.

- **நிதி ஆயோக் மற்றும் ஐ.பி.எம்.** நிறுவனம் ஆகியவை உயர் லட்சிய மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு உண்மை நேர ஆலோசனையை வழங்குவதற்கு **செயற்கை நுண்ணறிவை பயன்படுத்திய பயிர் சாகுபடி கணிப்பு மாதிரியை உருவாக்குவதற்கான** நோக்க அறிக்கையில் (Statement of Intent – SoI) கையெழுத்திட்டுள்ளன.

- **சீனா, அப்ஸ்டார் - 6C** எனும் புதிய தொலைத் தொடர்வு விண்கலத்தை புவியின் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

- இந்த விண்கலம்**, லாங் மார்ச் - 38 ராக்கெட்** மூலம் ஸிசாங் விண்வெளி ஏவு மையத்திலிருந்து ஏவப்பட்டது.

- **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ)** இடங்களின் (Location) துல்லியமான தரவுகளை அளவிடுவதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வழிகாட்டு **செயற்கைக் கோள்களில் பயன்படுத்தப்படும் அணு கடிகாரங்களை** உருவாக்கியுள்ளது.

- வங்கதேச நாட்டின் முதல் தொலைத் தொடர்பு விண்கலமான **பங்கபந்து** விண்கலம் - **ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கான் 9** வகை ராக்கெட் மூலம் (Falcon 9 rocket) கென்னடி விண்வெளி ஏவுமையத்தின் ஏவு வளாகம் 39A-விலிருந்து (39A Launch Complex) ஏவப்பட உள்ளது.

- **லாங் மார்ச் 4C ராக்கெட் மூலம் கவா∴பென் - 5 விண்கலத்தை சீனா,** வடக்கு ஷான்சி மாகாணத்திலுள்ள டெய்யூன் விண்வெளி ஏவு மையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

- விண்கலன்கள் மற்றும் செயற்கைக் கோள்களுக்கு ஆற்றல் அளிப்பதற்காக **ஹைட்ராக்ஸில் அம்மோனியம் நைட்ரேட்டை** (Hydroxyl ammonium nitrate – HAN) அடிப்படையாகக் கொண்ட **சுற்றுச்சூழலுக்கு உதந்த உந்து எரிபொருள்** கலவையை (Environment – friendly propellant blend) இஸ்ரோவின் திரவ உந்து எரிபொருள் அமைப்பு மையத்தின் (Liquid Propulsion Systems Centre – LPSC) ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி வருகின்றனர்.

➢ **இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்** தனியார் நிறுவனத்துடன் கூட்டிணைந்து, நீரில் ஆர்செனிக்கின் அளவை கண்டறியவும் அதை நீக்கவும் **ஆர்செனிக் உணர்வி** மற்றும் வெளியேற்றம் ஊடகத்தை உருவாக்கியுள்ளது. இந்த ஊடகம் நீரைப் பாதுகாப்பானதாக மாற்றுவதுடன் வீடுகளில் பயன்படுத்தப்படக் கூடியதாகவும் உள்ளது.

➢ **யுனிசெ.ஃ.ப்** அமைப்பானது இந்தியாவில் கல்விச் சூழ்நிலைகளின் சிக்கலான பகுப்பாய்வுகளை எளிய முறையில் காட்சிப்படுத்தி மக்களுக்கு வழங்குவதற்காக **தரவுகள் காட்சிப்படுத்தல் செயலியை** வெளியிட்டுள்ளது.

- இந்த செயலியானது யுனிசெ.ஃ.ப்பின் தொழில்நுட்ப உள்ளீடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது. இச்செயலி பின்வரும் அமைப்புகளுடன் யுனிசெ.ஃ.ப்பின் கூட்டிணைவால் உருவாக்கப்பட்டுள்ளது.

➢ சீனாவின் வளர்ந்து வரும் மென்பொருள் சந்தையில் ஆதாயம் திரட்டிட தமது இரண்டாவதுத தகவல் தொழில்நுட்ப தாழ்வாரத்தை (information Technology Corridor) தென் மேற்கு சீனாவில் உள்ள குயியாங் மாகாணத்தில் இந்தியா ஏற்படுத்தியுள்ளது.

